# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்
# Our Lady of Deliverance Tamil Catholic Mission

மீட்பின் அன்னை மறைத்தளத்தின் 16வது கூட்டம் 16-05-2010 அன்று ஆலயத்தின் சிறிய மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு பங்குத்தந்தையின் ஆரம்ப செபத்துடன் கூட்டம் ஆரம்பமானது. அன்றைய தினம் திரு. சூசைமாணிக்கம், திரு. றொபின், அம்புறோஸ், விஜயகுமார், திருமதி கலிஸ்ரா தவராஜா ஆகியோர் சமூகம் தரவில்லை விஜயகுமாருக்குப் பதிலாக திரு. பெனாசியஸ் அவர்கள் சமூகம் தந்திருந்தார். கடந்த மாத கூட்ட அறிக்கையினை செயலாளர் அவர்களால் வாசிக்கப்பட்டது. அவற்றில் சில திருத்தங்கள் செய்யப்பட்ட பின்னர் திரு. அலெக்ஸ் அவர்கள் முன்மொழிந்தார் திரு. யூலியன் வழி மொழிந்தார்.

நீண்ட நாட்களாக எமது ஆலயத்திற்கு புல் வெட்டுவதற்கும் snow வழிப்பதற்கும் பல இடங்களில் ஓர் இயந்திரம் விசாரிக்கப்பட்டு வந்தது. அந்த வகையில் தற்பொழுது ஒன்றை வாங்கியுள்ளோம். அதனை எதிர் வரும் 18-05-10 செவ்வாய் கிழமை ஆலயத்திற்கு கொண்டு வருவார்கள். அதனை தகுந்த முறையில் தரித்து வைப்பதற்கு ஆலயத்தின் பின்புறம் உள்ள பகுதியினை திருத்தி அமைப்பதற்கும் உதவும்படி பங்குத்தந்தை கூறினார். மேலும் அந்த இயந்திரத்தை பயன்படுத்தக் கூடிய ஒருவரிடமே அதனை பயன்படுத்தும் படியும், snow வழிப்பதற்கு அவருக்கு உரிய சம்பளம் கொடுக்கும் படியாகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அத்தோடு இதனை திரு. சீலன் அவர்களிடம் வழங்குவதாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் ஆலயத்தின் பின்புறமாக தேவையற்ற பொருட்கள் கழிவு பண்டங்களை தகுந்த முறையில் அதனை ஓர் பெரிய Container ருக்குள் போடுவது சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது. இதனை city உடன் கதைத்து அதற்கமைவாக என்ன செய்யலாம் என திரு. யூலியன் அவர்கள் விசாரிப்பதாகவும் தெரிவித்தார்

மறைத்தள பங்கு மாணவர்களின் விளையாட்டுப் போட்டிகள் இரண்டு முறை நடைபெற்ற போது பிள்ளைகள் குறைவாக காணப்பட்டார்கள். இந்த முறை ஆனி மாதம் மத்தியில் அவர்களுடைய பரீட்சைகள் முடிந்த பின்னர் ஆனி மாத கடைசி வாரத்தில் வைக்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் ஆலயத்தின் பணிகளை எல்லோரும் செய்ய வேண்டும் ஆலயம் பங்கு மக்களில் தங்கியிருக்க வேண்டும். எனவே ஒவ்வொரு பொறுப்புகளையும் அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும் என்றும் பங்குத்தந்தை கூறினார். புதிதாக வரவிருக்கும் குருவானவர் அவர் தன்னுடைய பங்கில் இன்னொருவரைப் போட்ட பின்னர் இங்கு வருவார் என்றும், அவருக்கு அனைத்து ஒழுங்குகளையும் கடைசி 6 மாத காலங்களில் செய்து பங்குத்தந்தை தானும் திரும்ப செல்ல வேண்டும் என்றும் கூறினார்.

மேலும் பாதர் திபூசியஸ் ஒரு வருடம் இங்கு தங்கியிருப்தற்கு கேட்டிருந்தார். தற்போது **October** மட்டும் இங்கு இருக்க வேண்டி இருக்கிறது என்பதால் அதனையும் ஒழுங்கு செய்து கொடுக்க வேண்டும் என்றும் கலந்துரையாடப்பட்டது.

அடுத்த வாரம் பரிசுத்த ஆவியின் திருநாள் வாரம் அதற்கான ஒழுங்குகளை சிறப்பாக செய்ய வேண்டும் என்றும் கலந்துரையாடப்பட்டது. இந்த நாட்டின் சில விடயங்களை எம் பங்கு மக்களுக்கு தெரியப்படுத்தும் வகையிலும், அவர்களுக்கு உதவும் வகையிலும் ஓர் செயற்ப்பாட்டினை எமது ஆலயத்தில் செய்வது நல்லம் என்றும் திரு. வெனாசியஸ் அவர்கள் கூறினார்.

இறுதியாக செல்வன் சார்ஸ் அவர்களின் இறுதி செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

அருட். தந்தை அன்றூா தவராஜசிங்கம்
பங்குத்தந்தை
மீட்பின் அன்னை மறைத்தளம்

திரு.நெல்சன் ஆரோக்கியநாதன்
செயலாளர் (பங்குச்சபை)
மீட்பின் அன்னை மறைத்தளம்